**தலைப்பு 439 - பத்திக், கைத்தறி, துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பத்திக், கைத்தறி, துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெதிக், நெசவுத் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குவதாகவும்,

(ஆ) இந்த அறிக்கையில் 1.6.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுல்ல அவதாணிப்புகள் தொடர்பில் கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுல்ல பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவுகளை கணக்கிட்குட்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அமைச்சினால் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 4,581,375 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் திறைசேரி அச்சுப்பதிவு SA 82 இன் (நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பான பொழிப்பறிக்கை) பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் | சொத்துக்கள் முகாமைத்துவத்திற்காக திறைசேரி அண்மையில் அறிமுகப்படுத்தியிருந்த வழிகாட்டலுடனான கணக்கிட்குட்படுத்தல் முறைமையின் ஊடாக அவை சொத்துக்களுக்கு உள்ளீர்க்கப்படும் போது சில தவறுகள் இடம்பெற்றிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டு பெற்றுத் தரப்பட்ட அறிவுரையின் பிரகாரம் தற்போது சீர் | வருடத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக திறைசேரிக்கு அறிக்கைப்படுத்தப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 3,093,716 மாத்திரம் அறிக்கையிடப்பட்டிருந்தது. | செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அமைச்சிற்கு உரிமை மாற்றம் செய்யப்படாத கைத்தொழில் அமைச்சிற்குரிய கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 58,930,000 ஆன 9 வாகனங்கள் மற்றும் நிதி அமைச்சிற்குரிய கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 21,500,000 ஆன 3 வாகனங்கள் உட்பட 12 வாகனங்களின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா 80,430,000 அமைச்சின் நடைமுறையல்லா சொத்துக்களின் உள்ளே சேர்க்கப்பட்டிருந்தது. மேல் குறிப்பிடப்பட்ட 12 வாகனங்களில் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 36,230,000 ஆன 06 வாகனங்களின் பெறுமதி கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் பொருத்துக்கள் மற்றும் உபகரண ஒதுக்கம் ரூபா 80,430,000 வால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 80,430,000 ஆன பெறுமதியுடனான 12 வாகனங்களை இந்த அமைச்சிற்கு ஒதுக்கி கடிதமொன்றின் ஊடாக கையளிக்கப்பட்டுள்ளது. இதுவரை அவற்றின் உரிமையை இந்த அமைச்சிற்கு உரித்தாக்காதிருந்த போதிலும் அந்த வாகனங்களின் அனைத்து பொருளாதார பயன்களையும் பெற்றுக் கொள்வது இந்த அமைச்சு என்பதனாலும் அனைத்து எரிபொருள் செலவுகள் மற்றும் பராமரிப்புச் செலவுகளையும் தாங்கிக் கொள்வது இந்த அமைச்சு என்பதனாலும் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படுவது மிகவும் நியாயமானதாக தென்பட்டதனால் அந்தப் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டது. இருப்பினும் கணக்காய்வு அவதானிப்பின் ஊடாக அது தவறொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளதனால் 2022 ஏப்ரல் மாத திறைசேரி சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | வாகனத்தின் சட்டரீதியான உரிமையைப் பெற்றுக் கொண்டு கணக்கிட்குட்படுத்த வேண்டும். |

## 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | CIGAS கணக்கீட்டு முறைமையின் ஊடாக ஒவ்வொரு மாதமும் பொறுப்புக்கள் அனைத்தும் உள்வாங்கப்படுதல் கணக்கீட்டு நடைமுறையின் முக்கிய பகுதியொன்றாக காணப்படுவதுடன் பிரத்தியேகமான பதிவேடொன்று எழுத்துமூலமாக பேணப்படவில்லை என்பதுடன் அது குறைபாடொன்றாக கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் பொறுப்புக்கள் பதிவேடொன்றை ஆரம்பித்து நாளதுவரையாக்கப் படுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளதாக | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் ஒவ்வொரு நாளும் பரிசீலிக்கக் கூடிய வகையில் சொத்துக்கள் பதிவேடொன்றில் அந்த பொறுப்புக்கள் குறித்துக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) செலவுப் பேரேடு பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவு) பேரேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த வருடத்திலிருந்து முறையாக பேணப்பட்டு வருதாக | நிதிப்பிரமாணம் 447 இல் குறிப்பிட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படும் வகையில் 138 ஆவது பொது படிவத்தின் படி திணைக்கள ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவு) பேரேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) பொது வைப்புப் பதிவேடு<br>---------------------------------------------<br>நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்கப்படல் இப்போதைக்கு முறையாக இடம்பெறாவிடினும் அவை சீர்செய்யப்பட்டிருப்பதாக. | நாளதுவரையாக்கப் பட்டு பேணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு<br>---------------------------------------------<br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்குள் இழப்புக்கள் மற்றும் சேதங்கள் அறிக்கைப்படுத்தப்பட வில்லை என்பதனால் பதிவேடொன்று ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன் தற்போது அதுசீர் செய்யப்பட்டுள்ளது என்பதாக. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள மாதிரியின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து, கொண்டு நடாத்தப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வுக்குட்படுத்தி அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமாக கொண்டு நடாத்துவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட | இப்போது உள்ளக கணக்காய்வு பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் அந்த நடவடிக்கைகள் முடங்கிக் காணப்பட்ட போதிலும் துரிதமாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் அந்த மீளாய்வுகள் எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு வேலைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செயற்திட்டமொன்று காணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பின் பிரகாரம் அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | வெற்றிடமாகவுள்ள உள்ளக கணக்காய்வு பதவிக்காக உத்தியோகத்தரொருவரை துரிதமாக பெற்றுத் தருமாறு அரச நிர்வாக அமைச்சிற்கு விண்ணப்பமொன்று கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக. | உள்ளக கணக்காய்வொன்று நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உட்படுத்தப்பட்ட கடப்பாட்டுக் கூற்றில் மீளாய்வாண்டிற்காக 2022 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட ரூபா 996,091 ஆன செலவுகள், பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இவ்வாறான பிழைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர் களுக்கு அறிவூட்டப்பட்டிருப்பதாக | உட்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுக் கூற்றில் வருடத்திற்குரிய அனைத்து பொறுப்புக்களும் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ரூபா 4,359,899 கடப்பாட்டிற்காக அமைச்சு உட்படுத்தியிருந்த துடன் அந்தப் பெறுமதி திறைசேரிக்கு அறிக்கைப்படுத்தப்படாததன் காரணமாக திறைசேரியின் மாதத்திற்கான பொறுப்புக்கள் / ஒதுக்கப்பட்ட பொழிப்பறிக்கை (SA 90) யில் பொறுப்புக்கள் தொடர்பாக எவ்வித தகவலொன்றும் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு மாதமும் புதிய CIGAS கணக்கீட்டு முறைமையின் ஊடாக செலவுகளை அறிக்கைப்படுத்தும் போது முதலில் Commitment ஆக உள்வாங்கப்பட்டு இரண்டாவதாக Liability ஆக இறுதி நடவடிக்கையாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதால் மற்றும் வருடத்திற்குரியதை தெளிவாக இனங்காண்பதற்கு தவறியதன் காரணமாக மேற்கூறப்பட்ட குறைபாடு இடம்பெற்றிருப்பதுடன் ஏனைய பொறுப்புக்கள் முறையாக திறைசேரிக்கு அறிக்கைப்படுத்தப் பட்டுள்ளது. அவ்வாறே திறைசேரி கணக்குகள் பணத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் படுவதுடன் மற்றும் வருடத்தின் செலவுகளுக்குக எடுக்கப்படாததுடன் நிதி விலைவுகளுக்கு போதிய அளவு தாக்கம் ஒன்று ஏற்பட வில்லை என்பது அவதானிக்கப்பட்டதாக. | உட்படுத்தப் படுகின்ற அனைத்து பொறுப்புக்களும் திறைசேரிக்கு அறிக்கைப் படுத்தப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2021 செப்தெம்பர் 06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 7 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் ரூபா 302.31 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 15 மில்லியன் ஆன செயற்திட்டங்களில் 2021 ஆம் | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று காரணமாக தனிமைப்படுத்தல் ஊடரங்குச் சட்டம் விதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வேலைத்திட்டங்களில் செயற்திட்டங்கள் கிராம மட்டத்தில் அடையாளங் காணப்படுதல் கடினமாக இருந்தமையால் செயற்திட்டத்தை | பெற்றுக் கொடுக்கப்பட்ட ஒதுக்கங்களின் மூலம் உச்ச பயன்பாட்டினை அடைதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருடத்திற்குள் நடைமுறைப்படுத்தப் படாதிருந்ததுடன் 30 உள்நாட்டு ஆடை உற்பத்தி கிராமங்களை நிறுவுவதற்கான ரூபா 30 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 19 கிராமங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தது. உள்நாட்டு பத்திக் மற்றும் ஆடை உற்பத்தி முன்னேற்றத்திற்காக அமைச்சரவை பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நடைமுறைப்படுத்தல் தாமதமடைந்திருந்ததாக அதன் பிரகாரம் நிச்சயிக்கப்பட்ட காலத்திற்குள் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் பிரகாரம் ரூபா 15 மில்லியன் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் கடினமாக காணப்பட்டதுடன் 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை அரச செலவினங்களின் மீளாய்வு தொடர்பான அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் ஏற்பாட்டு ஒதுக்கங்களை சேமிக்குமாறு தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் ரூபா 500 மில்லியனான ஏற்பாடுகள் ரூபா 339 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 302.1 மில்லயின் 2021 திசெம்பர் 31 இல் செலவிடப்பட்டு நூற்றுக்கு 89 ஆன நிதி முன்னேற்றமொன்று கைப்பற்றப்பட்டிருந்ததாக தற்போது பெரும்பான்மையான பதவி நிலை உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் பின்விபர செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்குரிய வல்லமை காணப்படுவதாக. | |

## 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவு மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2020/02 சுற்றுநிருபத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அமைச்சின் வருடாந்த மீண்டெழும் மற்றும் மூலதன வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்து முகமாக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு | 2022 க்காக குறித்த காலப்பகுதிக்குள் விநியோகம் தயாரிக்கப்பட்டு தேவையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரின் அனுமதியைப் பெற்று அதன் பிரதியொன்றை பெறுகைகள் ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டமொன்று அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டுக்காக ரூபா 3.550 மில்லியன் உடைய மூலதன ஏற்பாடுகள் முறையான திட்டமொன்றினுள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |

**3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றுநிருபம் 01/2020 மற்றும் 9 ஆவது பந்தியின் பிரகாரம் பிணை வைப்பதற்கு தேவையுள்ள உத்தியோகத்தர்களுக்காக பிணை வைப்பொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக மீண்டும் தேடிப்பார்த்து சரி செய்யும் படி விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் அது சீர் செய்யப்படுவதாக. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 சேதம் மற்றும் நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 22 ஆந் திகதி KS-2354 ஆம் இலக்கமுடைய வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப அறிக்கையொன்று விநியோகிக்கப்பட்டு விபத்தின் சுபாவம், அதன் அளவு ஆகிய விடயங்களை வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் இது | KS-2354 ஆம் இலக்கமுடைய வாகனத்தின் விபத்து தொடர்பாக இலங்கை காப்புறுதி கம்பனியிடமிருந்து முழுமையாக உரித்து கொடையை தருவதற்கு இணங்கியிருப்பதுடன் நட்டமொன்று ஏற்படவில்லையென்பதாக. எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 104(3) இன் பரிசீலனை இல்லாமை குறைபாடொன்று என்பதுடன் அந்த நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக. | விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான நட்டம் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | PE-1858 ஆம் இலக்க கெப் வாகனம் 2021 சனவரி 13 அந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை விநியோகிக்கப்படுவது 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி வரை தாமதமாகியிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரணமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை தாமதமாகியிருந்தது. இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேதகு இராஜாங்க அமைச்சருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த PE-1858 ஆம் இலக்க கெப் வாகனம் 2021.01.13 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும், அந்த விபத்து தொடர்பாக அமைச்சிற்கு அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. 2021 யூலை 21 ஆந திகதியிலேயாகும். இந்த பரிசீலனைகளில் சில தாமதங்கள் இடம்பெற்றிருக்குமாயின் அது இந்த அமைச்சிற்கு கட்டுப்படுத்த முடியாத வெளிவாரியான விடயமொன்றாக கொவிட் 19 தொற்று நிலைமையினால் நாட்டிற்குள் ஏற்பட்ட சுற்றாடலுடனான காரணமொன்றாகும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கைகளை மேற்கொண்டு அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| குருநாகலை மாவட்டத்திலே ஆடை உற்பத்தி நிறுவனங்களுக்காக தைக்கப்பட்ட ஆடை உற்பத்திகளை மேற்கொள்வதற்கு தேவையான உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டம் தொடர்பான முன்மொழிவு 2021 யூலை 26 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வடமேல் மாகாண வீதி, போக்குவரத்து, வீடு மற்றும் நிர்மாணம், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்பட வேண்டிய உபகரணங்கள் அளவு, செலவுகள் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, | சிறிய அளவிலான 30 ஆடைக் கைத்தொழில்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமையின் மத்தியில் பொருத்தமான இடத்தை அடையாளப்படுத்தல் தாமதமடைந்ததாகவும் அத்துடன் அனைத்து உபகரணங்களும் தொழில்நுட்பக் குழுவின் பரிசீலனையின் பின்னர் மற்றும் உரிய பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டளையின் பின்னர் | அனைத்து கொடுப்பனவுகளும் நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேவையான கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் 2021 நவம்பர் 29 ஆந் திகதி வரையும் தாமதமடைந்திருந்தது. அதன் பிரகாரம் தேவையான கொள்வனவிற்காக அரச வாணிப கூட்டுத்தாபனத்திற்கு 388109 ஆம் இலக்க ரூபா 26,436,790 காசோலை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு தினமான 2022 ஏப்ரல் 6 ஆந் திகதி வரை அந்த காசோலை விநியோகிக்கப்படாமல் காணப்பட்டதுடன் தேவையான பொருட்கள் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 137, 138, 139 இன் பிரகாரம் அங்கீகரித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கொடுப்பனவு தொடர்பாகவும் உரிய பொருட்கள் சரியானதென பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக ஒவ்வொரு வவுச்சரிலும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பொறுப்புக் காணப்பட்ட போதிலும் குறித்த கொடுப்பனவை மேற்குறித்த பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமைக்கு இணங்கமில்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காசோலைகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்ப துடன் அந்த உபகரணங்கள் கொண்டுவந்து கையளிக்கப்பட்டதற்கான உறுதிப்பாடு கிடைக்கப் பெறாமையினால் காசோலைகளை விநியோகிப்பதற்கும் முடியாமையினாலும் மற்றும் அரச வாணிப கூட்டுத்தாபனம் அரச நிறுவனமொன்றென் பதனாலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி எழுதப்பட்ட காசோலை தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக. | |

## 4. நல்லாட்சி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரைக்கும் எடுக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தாலும் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கான உத்தியோகத்தர் ஒருவர் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் துரிதமாக தீர்வு காண்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக. | உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உண்மையான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியத்திற்கான செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 21 பதவிகளுக்காக 59 சேவையாளர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உண்மையான சேவையாளர்களின் எண்ணிக்கை 28 ஆக காணப்படுகின்றமையால் 13 பதவிகளுக்காக 31 சேவையாளர்களின் வெற்றிடங்கள் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை அமைச்சின் நிர்வாக நடவடிக்கைகள், செயலாற்றல் நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. இந்த வெற்றிடங்களினுள் சிரேஷ்ட தரத்திலான பதவிகளான சிரேஷ்ட உதவிச் செயலாளர், பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், உதவிச் செயலாளர், உள்ளக கணக்காய்வாளர் ஆகிய பதவிகள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருள் உள்ளடக்கப்படாத உதவி செயலாளரொருவர் தொழிற்சங்க மற்றும் ஊழியர் தொடர்பாடலுக்காக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளது. | பதவியணியினரின் வெற்றிடங்களுக்காக அனைத்து நவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் துரிதமாக தீர்வு காணப்படும் என்பதாக. | அங்கீகரிக்கப்பட்ட மற்றும் போதுமான பதவியணியினரை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |